**தலைப்பு 311 தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுமற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று,காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுகள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 27 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடார்ந்த விவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 27 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கபடுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தை தவிர, நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல ் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமானதுமான பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்று தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்படுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுகள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கும் இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுகளைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மைன பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவறான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக்கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களமானது வருடார்ந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானம், செலவினம், சொத்துக்கள், மற்றும் பொறுப்புகள் தொடர்பான முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேண வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) ஆம் உப பிரிவின் பிரகாரம் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கப்பூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து அதனை பேணுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் செயற்திறன் அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை ஆக்கப்பூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஓட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்ட சான்றுறுதிப்படுத்தலாகும். எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதன் உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடுமாதலால் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாக கொண்டு பயன்படுத்துவோர் பொருளாதார தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அது தொடர்பாக கருத்திற்கொள்ள வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னனியுடன்இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடியபொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினைஇனங்கனும்போதும் மதிப்பிடும்போதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாரான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்து கொள்வதற்கு போதுமான மற்றும்பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்த்துக் கொள்ளல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம்.

- சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கப்பூர்வம் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலான நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் என்பன பொருத்தமான மற்றும் நியாயமானவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும்போது, நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகள் கட்டுபாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாகபிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களைநான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் அவசியம் இல்லாமையால் மீளாய்வாண்டினது நிதிக்கூற்றக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது. மேலும் அக் காரணத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் இவ் அறிக்கையில் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்று சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2018 நவம்பர் 21 திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி கூற்றுக்களை தயாரித்தல் வேண்டும். எனினும் அத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யாத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ள.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து |
|---|---|---|
| சுற்றறிக்கையின் 3.3 பந்தியின் பிரகாரம் நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடும் போது அச் சொத்துக்களுக்கு தொடர்புடைய பிரதான லெஜர் மீதி பெறுமதிகள் தனி மீதிகளுடன் இணங்காவிடின் ஜர்னல் குறிப்புக்கள் மூலமாக சீராக்கல் வேண்டும். எனினும் திணைக்களத்தின் மூலதன செலவு லெஜரில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 8,894,897 பெறுமதியான செலவு நிதி அல்லாத சொத்தாக கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடப்படுதல் வேண்டும். | 2001 - கட்டிடம் அமைந்துள்ள நிலத்தின் வரைபு, திட்டம், உரிமை சான்றிதழ் இல்லாமையினால் நிதி அல்லாத சொத்தாக சேர்க்கப்படவில்லை.<br>2002, 2003 - நிதி அல்லாத சொத்தாக கணக்கிலிடப்பட நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.6.2 நிதி நிலைமைக் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து |
|---|---|---|
| (அ) 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 5,161,274 பெறுமதியான அலுவலக கதிரைகள் மற்றும் பணிதள ஒதுக்கீடு செலவுகள் 2018 ஆண்டில் கையகப்படுத்தல்களாக கணக்கிலிடப்பட்டிருந்தது | 2017 ஆம் ஆண்டில் செய்யப்பட்டிருந்த கொள்வனவு மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிக்கு சீராக்கப்பட வேண்டும். | தற்போது சீராக்கல் செய்யப்பட்டுள்ளது. |
| (ஆ) 2017 ஆம் ஆண்டில் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 5,677,224 பெறுமதியான சொத்துக்கள் மீளாய்வாண்டில் கொள்வனவாக கணக்கிலிடப்பட்ருந்தது. | கடந்த ஆண்டின் மதிப்பிடல் மீளாய்வாண்டில் ஆரம்ப மீதியில் சீராக்கப்படல் வேண்டும். | 2017 கணக்குகளில் சீராக்க முடியாது போனதனால் 2018 கூட்டுத்தொகையாக கவனத்தில் கொள்ளப்பட்டது. |
| (இ) 2017 ஆம் ஆண்டில் இறுதி கணக்கிற்கேற்ப 2502 ஆம் செலவு விடயத்தின் கீழ் ரூபா 3,832,191 பெறுமதியான GIS கணனி மென்பொருள் மீதியொன்று காணப்பட்டாலும் மீளாய்வாண்டில் அவ்வாறான கணனி மென்பொருள் சொத்து மீதியொன்று கணக்குகளுக்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் சொத்துக்களை சரியாக கணக்கிலிடப்பட வேண்டும். | நிதி அல்லாத சொத்துக்கள் சிகாஸ் நிகழ்ச்சி நிரலுக்கு உள்ளடக்கப்படவில்லை. |
| (ஈ) 2018 ஆம் ஆண்டின் நடைமுறை அல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 18,578,138 பெறுமதியான சொத்துக்கள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களால் ஆன குழுவினால் மதிப்பிடப்பட்டு கணக்கிலிடப்பட்டிருந்தது. எனினும் சமனான சொத்துக்களின் ஆய்வுகள் தொடர்பாக ரூபாவின் பெறுமதி தொடர்பான பொதுவான அளவுக்கோலொன்று அக் குழுவினால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சொத்து மதிப்பீட்டின் போது பொதுவான அளவுகோலொன்றை தயாரித்தல் வேண்டும் | சொத்துக்களின் ஆயுட்காலம் மற்றும் நிகழ்கால தன்மையை கருத்திற் கொண்டு குழுவினால் பெறுமதி தீர்மானிக்கப்பட்டள்ளது. |

| | | |
|---|---|---|
| (உ) திணைக்களத்திற்கு சொந்தமான ஓய்வு அறைகள் மற்றும் வாகன தரிப்பிடமொன்று மதிப்பிடப்பட்டு கணக்கிலிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | திணைக்களத்தின் சொத்துக்கள் சரியாக கணக்கிலிடப்பட வேண்டும் | தொடர்புடைய ஆதனங்களின் வரைபு/திட்டம் உரிமை பத்திரம் இல்லாமையினால் மதிப்பிட முடியாதுள்ளது. |

**1.6.3 அரச உத்தயோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து** |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 திகதிக்கு 5 வருடங்களுக்கு கூடிய கடன்பட்டுள்ளோரின் மீதி ரூபா 111,551 ஆகும். அத்துடன் 2 வருடத்திற்கு மற்றும் 1 வருடத்திற்கு மேற்பட்ட கடன்பட்டுள்ளோரின் மீதி முறையாக ரூபா 311,640 மற்றும் ரூபா 501,585 ஆக காணப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் கடன் மாற்றம் செய்தல் மற்றும் அறவிடல் முறையாக செய்தல் வேண்டும். | 5 வருடத்திற்கு மேற்பட்ட மீதி கழிக்கப்படுவதற்கு திறைசேரியிடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. ஏனைய கடன் மீதிகளின் தவணைக் கட்டணம் அறவிடப்படுகின்றது |

**1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் முறையாக பேணப்படாமை**

திணைக்களத்தினால் கீழே காட்டப்படும் சில ஆவணங்கள் பேணப்பட்டடிருக்கவில்லை. அத்துடன் சில ஆவணங்கள் முறையாக மற்றும் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படவில்லை என மாதிரி கணக்காய்வுகளின் போது அவதானிக்கப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து** |
|---|---|---|
| **(அ) நிலையான சொத்து பதிவேடு**<br>1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 இலக்க திறைச்சேரியின் சுற்றறிக்கை மற்றும் 2009 செப்தெம்பர் 01 ஆந் திகதிய DMA/2009 (2) இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்து பதிவேடு பேணப்படாததுடன் காணி மற்றும் கட்டிடத்திற்காக தயாரிக்கப்பட்ட ஆதன பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 இலக்க திறைச்சேரியின் சுற்றறிக்கை மற்றும் 2009 செப்தெம்பர் 01 ஆந் திகதிய DMA/2009 (2) இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றறிக்கை மற்றும் நிதி பிரமாணம் 502(2) இல் 11 ஆவது உறுப்புரையின் பிரகாரம் நிலையான சொத்து பதிவேடு பேணப்படுதல் வேண்டும். | அப் பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது. |

| | | |
|---|---|---|
| (ஆ) **கணனி, பகுதிகள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்து பதிவேடு**<br>------------------------------------------------------<br>IAI/2002/02 இலக்க 2002 நவம்பர் 28 திகதிய திறைசேரியின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பப்படிவ வழங்குனர் சம்பூர்ணப்படுத்தியதாக ஒப்பம் அல்லது உத்தியோகபூர்வ முத்திரை வைக்கப்படாத சந்தர்ப்பம் காணப்பட்டது. | 2002 நவம்பர் 28 திகதிய IAI/2002/02 இலக்க திறைசேரியின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் கணனி, பகுதிகள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்து பதிவேடு மற்றும் தொடர்புடைய விண்ணப்பப்படிவங்கள் பேணப்பட வேண்டும் | சுற்றறிக்கையின் பிரகாரம் அவ் விண்ணப்பபடிவ வழங்குனரைக் கொண்டு கையொப்பம் இட்டுக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |

**1.6.5 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்**

---------------------------------------------------------------------------------------------------------------

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 38 பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் செய்யப்படுதல் வேண்டும். எனினும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் நிதி கட்டுப்பாட்டிற்காக பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணிச்செல்வதென கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அம் முறைமையின் பயனுறுதி தொடர்பாக முன்னராக செய்யப்பட்ட மீளாய்வை செய்து அதன் படி முறைமை பயனுள்ளதாக பேணிச்செல்ல தேவையான மாற்றங்களை செய்தல் வேண்டும். அவ் மீளாய்வுகள் எழுத்து மூலமாக செய்யப்பட்டு அதின் ஒரு பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைத்தல் வேண்டும். எனினும் அவ்வாறான மீளாய்வுகள் செய்யப்பாட்டமைக்கான அறிக்கைகள் கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட்டிருக்கப்வில்லை. | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 38 பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) வருடாந்த மற்றும் வேறு | 2018 ஆம் ஆண்டின் 19 | 2017 வருடத்திற்கான |

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்கள் தேவையான வேளைகளில் தயாரிக்க நேரிடும் என கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்ற நிறுவனங்கள் தொடர்புடைய வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு முன்வைப்பதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருத்தல் வேண்டும். எனினும் அறிக்கையின் 3.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகள் காரணத்தினால் அத் தேவைப்பாடு பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. | ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 38 பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | செயலாற்றல் கூற்று 2018 மே 31 ஆந் திகதி அமைச்சுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் குறிக்கப்பட்ட திகதியில் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கிறேன். |

## 1.6.6 சட்ட விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வுகளின் போது அவதானிக்கப்பட்ட சட்ட விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து** |
|---|---|---|---|
| **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம்** | **இணங்காமை** | | |
| (அ) நிதிப் பிரமாணம் 1647 | வாகன பழுது, சேவை, எரிப்பொருள் ஆய்வு மற்றும் வாகன மேலதிக பகுதிகள் தொடர்பாக லொங் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குறிக்கப்பட்ட பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது வரையில் அனைத்து வாகனங்களினதும் எரிப்பொருள் ஆய்வு செய்யப்பட்டு லொங் குறிப்புக்களும் இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) நிதிப் பிரமாணம் 371 (2) மற்றும் 2015 ஜுலை 14 திகதிய 3/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை. | (I) நிர்வாகம் சாராத உத்தியோகத்தர்களுக்கு 53 சந்தர்ப்பங்களின் போது ரூபா 475,029 ஆன முற்பணம் வழங்கப்பட்டிருத்தல். | குறிக்கப்பட்ட பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்போது அந் நிலை சீராக்கப்பாட்ள்ளது. |
| | (II) 26 சந்தர்ப்பங்களின் போது பெறப்படட ரூபா 297,934 ஆன கட்டுநிதியை செலுத்துவதற்கு 20 | குறிக்கப்பட்ட பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் படி நடவடிக்கை | தற்போது அந் நிலை சீராக்கப்பாட்ள்ளது. |

| | | |
|---|---|---|
| | தொடக்கம் 97 நாட்கள் வரை காலதாமதம் ஏற்பட்டிருத்தல். | எடுத்தல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதிக்கு சுற்றுலா பங்களாக்களில் தங்குதலில் திணைக்களத்திற்கு பெறப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 278,500 ஆக காணப்பட்டது. அதற்குள்ளான 2, 3 வருடங்களினுள் பெற வேண்டிய வருமான மீதி ரூபா 3,600 ஆக காணப்பட்டதுடன் 3, 4 வருடங்களினுள் பெற வேண்டிய வருமான மீதி ரூபா 151,500 ஆக காணப்பட்டது. | பெறவேண்டிய வருமானம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை வினைத்திறனாக செய்தல் வேண்டும். | எஞ்சிய பணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என தெரிவிக்கின்றேன். |

### 2.2 செலவீன முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் முடியுமானவரையில் முழுமையான மற்றும் சரியான செலவீன மதிப்பீட்டை தயார் செய்யாததனால் 02 மீண்டெலும் செலவு விடயங்களுக்காக மதிப்பிடப்பட்டிருந்த முழு நிதி ஏற்பாட்டில் 40 சதவீதத்திற்கும் மேலான தொகை அதாவது,ரூபா 1,834,852 தொடர்புடைய பணிகளுக்காக செலவு செய்யப்படாமல் வேறு செலவு விடயங்களுக்காக மாற்றப்பட்டு காணப்பட்டது. | முடியுமானவரையில் முழுமையான மற்றும் சரியான செலவீன மதிப்பீட்டை தயார் செய்தல் வேண்டும். | வாகனங்களை அகற்றுவதற்கு தீர்மானிப்பட்டதினால் வாகனங்கள் பழுது பார்க்கப்பட்டு இருக்கவில்லை. அத்துடன், மொழி கொள்கைக்கு தொடர்புடைய விண்ணப்பம் இல்லாமையினால் எஞ்சிய நிதி ஏற்பாடு நி.பி 66 இலிருந்து மாற்றப்பட்டுள்ளது. |
| (ஆ) கட்டிட கட்டுமானம், வீட்டுப் பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவிற்காக | முடியுமானவரையில் சரியாக வருடாந்த மதிப்பீட்டை தயார் | நிதி ஏற்பாடு எஞ்சும் என எதிர்பார்க்கப்படும் செலவு விடயங்களிலிருந்து |

| | | |
|---|---|---|
| வருடாந்த மதிப்பீட்டின் மூலமாக நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் நி.பி 66 இனால் ரூபா 23,990,000 நிதி ஏற்பாடு மாற்றப்பட்டு காணப்பட்டது. | செய்தல் வேண்டும். | மாற்றும் படியாக எழுத்து மூல ஆலோசனை பெறப்பட்டுள்ளது. |
| (இ) தேவைக்கேற்ப மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு பெறப்படாமல் 05 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த நிகர நிதி ஏற்பாட்டில் 30 சதவீதத்திற்கு மேலதிக அளவு அதாவது ரூபா 5,388,333 நி.பி 66 மாற்றுதலினூடாக பெறப்பட்டிருந்தது. | முடியுமானவரையில் சரியாக வருடாந்த மதிப்பீட்டை தயார் செய்தல் வேண்டும். | ஏதிர்காலத்தில் முடியுமானவரையில் சரியான மதிப்பீட்டை தயார் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) உட்கட்கமைப்பு வசதிகள் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிகர நிதி ஏற்பாடு ரூபா 5,000,000 ஆக காணப்பட்டது. எனினும் மீளாய்வாண்டில் அதில் ரூபா 359,850 அதாவது 7 சதவீதம் செலவு செய்யப்பட்டிருந்தது. | முடியுமானவரையில் சரியாக வருடாந்த மதிப்பீட்டை தயார் செய்தல் வேண்டும். | தேசிய பௌதீக நிர்மாணித்தல் சபையை அழைப்பதற்கு முடியாது போன காரணத்தினால் தொடர்புடைய திட்டத்திற்கு அனுமதி பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தினால் தொடர்புடைய பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என மற்றும் தேசிய பௌதீக திட்டம் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (உ) இயந்திர மற்றும் இயந்திர உபகரணங்களை மேம்படுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 200,000 ஆன மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு பெறப்பட்டிருந்தாலும் மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 99,106 ஆன அதாவது நிகர ஏற்பாட்டில் 50 சதவீதம் எஞ்சி காணப்பட்டது. | முடியுமானவரையில் சரியாக வருடாந்த மதிப்பீட்டை தயார் செய்தல் வேண்டும். | ஏதிர்காலத்தில் முடியுமானவரையில் சரியான மதிப்பீட்டை தயார் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கு உட்படுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நி.பி 115 பிரகாரம் முன்னைய நிதி ஆண்டில் திசெம்பர் மாதம் முடிவில் செலுத்தப்பட வேண்டிய உரிமை கோரிக்கை முடியுமான | கடன்பாடுகளுக்கு உட்படுதல் மற்றும் கட்டணம் செலுத்துதலுடன் | தற்போது செலவு செலுத்தப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| எல்லா சந்தர்ப்பங்களிலும் தொடர்புடைய ஆண்டில் மார்ச் மாத இறுதிக்குள் செலுத்தப்படல் வேண்டும். எனினும் கதிர்காமம் சுற்றுலா பங்களா பழுது பார்த்தலுக்காக மீளாய்வாண்டினுள் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 2,138,284 செலுத்தப்பட வேண்டியிருந்தது. எனினும் 2019 ஏப்ரல் 30 வரையிலும் அதற்காக ரூபா 599,125 மட்டும் செலுத்தப்பட்டிருந்தது. | தொடர்புடைய நிதி பிரமாணத்தின் பிரகாரம் மேற்கொள்ளல் வேண்டும். | |
| (ஆ) நி.பி 94(1) பிரகாரம் ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டினை தாண்டி ஏதேனும் கடன்பாடு அல்லது செலவு ஏற்படுத்தப்பட கூடாது. எனினும் 2018 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் 09 செலவு விடயங்களுக்காக நிதி ஏற்பாட்டினை மீறி ரூபா 3,257,651 கடன்பாட்டினை ஏற்படுத்திக் கொண்டு காணப்பட்டது. | நிதி பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் படி வருடாந்த செலவு மற்றும் கடன்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளல் வேண்டும். | 2018 ஆண்டிற்கு தொடர்புடைய செலவு அவ் ஆண்டிற்குள்ளேயே ஏற்க நேரிட்டதனால் எல்லை மீறியுள்ளது. |

**2.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பிங்கிரி தேவகிரி ரஜமஹா விகாரையின் அபிவிருத்தி திட்டத்தினை தயாரிப்பதற்காக புத்தசாசன அமைச்சிலிருந்து ரூபா 550,000 மற்றும் என்டர்பிரைசஸ் இலங்கை கண்காட்சிக்காக வெகுசன ஊடக அமைச்சிலிருந்து ரூபா 1,000,000 மற்றும் மெத்சித் அருண நிகழ்ச்சிக்காக மாநகர மற்றும் மேல் மாகாண அமைச்சிலிருந்து ரூபா 2,766,223 என்ற ரீதியில் திணைக்களத்திற்கு பெறப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 4,316,223 பணத்தில் மீளாய்வாண்டு இறுதியில் முறையாக 81 சதவீதம் 38 சதவீதம் மற்றும் 33 சதவீதம் எஞ்சி காணப்பட்டது. | முடியுமானவரையில் முழுமையான மற்றும் சரியான செலவீன மதிப்பீடடை தயார் செய்தல் வேண்டும். | அப் பணிகள் நிறைவாகாததனால் நிதி ஏற்பாடு எஞ்சியது. எதிர்காலத்தில் அவ்வாறான நிலைமைகளை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2.5 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பணவு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மாதிரி கணக்காய்வின் படி 14 சந்தர்ப்பங்களின் போது உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட முதல் கட்டுநிதியை செலுத்துவதற்கு முதல் கூட்டுத்தொகை ரூபா 158,190 ஆன கட்டுநிதி மீண்டும் அவ் உத்தியோகத்தர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தது. | முற்பண கட்டுப்பாடு முறையாக்கப்பட வேண்டும் | முதல் கட்டுநிதி செலுத்துவதற்கு முதல் மீண்டும் கட்டுநிதி பெற்றுக்கொடுத்தல் தற்போது நடைபெறாது. |
| (ஆ) முற்பணம் தீர்வின் போது அப் பணச் செலவு தொடர்பான எழுத்து மூல உறுதி முன்வைக்கப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | முற்பண கட்டுப்பாடு முறையாக்கப்பட வேண்டும் | பில்கள் மற்றும் ரசீதுகள் முறையாக பெற்றுக்கொள்ளப்பட்டு தீர்ப்பணவு செய்யப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு.

### 3.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நோக்கெல்லைக்கு உள்ளடக்கப்படாத புனித பூமி பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக 158 இற்கு மேற்பட்ட ஊழியர்கள் 2018 ஆம் ஆண்டில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அதற்காக திறைசேரியினால் தனி நிதி ஏற்பாடு பெற்றுக்கொடுக்கப்பட மாட்டாது என மேலும் அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணியை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளல். | இவ் ஊழியர்களை புத்த சாசன அமைச்சுக்கு இணைப்பதற்கு கலந்துரையாடப்பட்டு வருகின்றது. |

## 3.2 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/1 இலக்கமுடைய நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்பாட்டு திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய நிறுவன ஒழுங்கமைப்பு அனுமதிக்கப்பட்ட ஊழியர்கள் மற்றும் தற்போது சேவையிலுள்ள ஊழியர்கள் தொடர்பான தகவல்கள், வருடாந்த வரவு செலவு செயல்பாடு, கால எல்லை மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற நிறைவின் படி முதன்மை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட செயல்பாட்டு திட்டம், கட்டுநிதி தேவை திட்டம், பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சிக்காக பெறுகை திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வு திட்டம் போன்றன 2018 ஆம் ஆண்டின் செயல்பாட்டு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் பணிகள் தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் முறையான திட்டம் தயாரித்தல் வேண்டும் | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்பாட்டு திட்டமொன்று 2019 இற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) திறைச்சேரியிலிருந்து இவ் திணைக்களகத்திற்கு கிடைக்கப் பெறுகின்ற நிதி ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக வேறு நிறுவனங்களிலிருந்து வெவ்வேறு திட்டங்களுக்காக நிதி ஏற்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றது. எனினும் திணைக்களத்தின் செயல்பாட்டு திட்டத்திற்கு அதனுடன் தொடர்புடைய பணிகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் பணி ஒப்படைகள் தொடர்புடைய சுற்றறிக்கை பிரகாரம் முறையான திட்டம் தயாரித்தல் வேண்டும் | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்பாட்டு திட்டமொன்று 2019 இற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (இ) 2018 ஆம் ஆண்டில் வரவு செலவு மதிப்பீட்டில் கட்டிட மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 1,000,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டு இருந்தது. எனினும் 2018 ஆம் ஆண்டில் செயல்பாட்டு திட்டத்திற்கு தொடர்புடைய விடயங்கள் | திணைக்களத்தின் பணி ஒப்படைகள் தொடர்புடைய சுற்றறிக்கை பிரகாரம் முறையான திட்டம் தயாரித்தல் வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்பாட்டு திட்டமொன்று 2019 இற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. |

உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 கடமைகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அநுராதபுர புனித பூமிக்குள் மக்கள் பெருக்கத்தினை எல்லைக்குட்படுத்தல், தொல்பொருள் தளங்கள் பாதுகாத்தலை உறுதிசெய்தல், பக்தர்களுக்காக ஓய்வு அறை சுற்றுலா விடுதிகள் கட்டுவித்தல் மற்றும் தற்போது இப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்கு நாகரீக வசதிகளுடன் வாழ்வதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கல் போன்ற நோக்கங்களுக்காக அநுராதபுர லோலுகஸ்வெவ புதிய நகர திட்டத்தினை செயல்படுத்த 2006 ஆம் ஆண்டிலிருந்து அமைச்சரவை அனுமதியும் பெறப்பட்டுள்ளது. அதன் படி 2016, 2017, மற்றும் 2018 வருடங்களில் முறையாக ரூபா 100 மில்லியன், ரூபா 200 மில்லியன் மற்றும் ரூபா 185 மில்லியன் என்றவாறு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டு திட்ட நடவடிக்கைகளுக்காக திட்டமிடப்பட்டு தயாரிக்கப்பட்டு இருந்தாலும் 2017 ஆம் ஆண்டில் ரூபா 5 மில்லியன் செலவிடப்பட்டு செயல்திறன் ஆய்வு அறிக்கையொன்று மட்டும் தயாரிக்கப்பட்டு இருந்தது. | செயற்திட்ட திட்டத்தினை தயார் செய்தல் மற்றும் செயற்படுத்தல் வினைத்திறனாக காணப்படல் வேண்டும். | காணியை சுற்றி அளத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (ஆ) மா நகர சபை மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் மெத்சித் அரண திட்டத்தின் கீழ் 05 திட்டங்களுக்காக ரூபா 61,358,792 நிதி ஏற்பாடு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தாலும் அதில் கந்துபொட பவுன் செத் ஆரோக்கிய மைய கட்டுமான பணிகள் கணக்காய்வு திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டு | செயற்திட்ட திட்டத்தினை தயார் செய்தல் மற்றும் செயற்படுத்தல் வினைத்திறனாக காணப்படல் வேண்டும் | மெத்சித் அரண திட்டத்தின் கந்துபொட பவுன் செத் ஆரோக்கிய நிலையத்திற்காக நிதி ஏற்பாடு பெறப்படாததனால் இதன் கட்டுமாணம் ஆரம்பிக்கப்பட இயலாது காணப்பட்டது. |

இருக்கவில்லை.

**3.4 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டில் ரூபா 34,602,321 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த 04 செயற்திட்டங்கள் 60 தொடக்கம் 120 நாட்கள் வரையான காலத்துக்குள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். எனினும் 2018 திசெம்பர் இறுதி வரையிலும் ஒரு கட்டுமானத்தின் வேளையாயினும் பூர்த்தி செய்யப்பட்டுருக்கவில்லை. | செயற்திட்ட திட்டங்கள் தயாரித்தல், நிதி ஏற்பாட்டை ஒதுக்கல், செயற்படுத்தல் வினைத்திறனாக இருத்தல் வேண்டும் | கம்பஹா மாபிம தாய் ஸ்ரீ லங்கா பௌத்த நிலையத்தின் தியான அறை கட்டுமானம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. இம்புலகந்த ஸ்ரீ சம்புத்த விகாரையின் தம்ம மண்டபம் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. முன்டிகல ஸ்ரீ சுமங்கல ஆராண்யத்தின் கட்டுமாண பணிகள் இறுதி கட்டத்தில் உள்ளது. தொடன்கொட ஸ்ரீ சுபோதி ரஜமகா விகாரையின் தியான அறை கட்டுமான திட்டம் கைவிடப்பட்டுள்ளது. |
| (ஆ) மேற்குறிப்பிட்ட ஒப்பந்தங்களின் மேற்பார்வை நடவடிக்கைகள் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களகத்திற்கு சுமத்தப்பட்டிருந்ததுடன் அதற்கான ஒப்பந்த பணத்தில் 3 சதவீதம் திணைக்களகத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் ஒப்பந்த காலத்தை அதிகரிப்பதற்காக ஒப்பந்தகாரர்களினால் கோரப்பட்ட விண்ணப்பம் தொடர்பாக முறையாக பரீட்சித்து பார்க்காமல் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.. | ஒப்பந்த மேற்பார்வை நடவடிக்கைகள் முறைப்படுத்தப்பட வேண்டும் | ஒப்பந்தத்திற்காக செலுத்தப்பட்ட முற்பணம் அறவிடப்படுதலில் காணப்பட்ட பிரச்சணையினால் காலம் நீடிக்கப்பட்டுள்ளது. |
| (இ) செயற்திட்டத்திற்காக ஒப்பந்தம் ஒப்படைத்தல் கடிதம் அனுப்புதல், அவ் ஒப்பந்தம் ஏற்கப்பட்டதென கடிதம் பெறல், முற்பணம் விண்ணப்பித்தல் மற்றும் முற்பணம் | ஒப்பந்த நிர்வாகம் முறைமைப்படுத்தல் வேண்டும் | முற்பணத்திற்காக உத்தரவாதம் பெற்றுக்கொள்ளாததினால் வேளை ஆரம்பித்ததுடன் முற்பணம் பெற்றுக்கொடுக்கப்பட்டது. |

பெற்றுக்கொடுத்தல் போன்றன நடந்த காலக்கட்ட தாமதத்தினை கருத்திற் கொள்ளும் போது, செயற்திட்ட தாமதத்திற்கு அக் காலத்தினையும் கருத்திற் கொள்ள வேண்டுமென அவதானிக்கப்பட்டது.

### 3.5 குறைப்பயன்பாடுடைய நிதியங்கள்

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மெத்சித் அரண செயற்திட்டத்திற்காக மா நகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் 2016, 2017 மற்றும் 2018 வருடங்களில் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் மிகுதி 67 தொடக்கம் 91 சதவீதம் வரையான வீச்சுக்குள் காணப்பட்டது. | செயற்திட்ட திட்டங்கள் தயாரித்தல், நிதி ஏற்பாட்டை ஒதுக்கல், செயற்படுத்தல் வினைத்திறனாக இருத்தல் வேண்டும் | ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட நிறுவனத்தின் ஊழியர்களின் இடம் மாற்றல், ஓய்வு பெறல், காலநிலை தாக்கம் மற்றும் கட்டுமானத்திற்காக பண்டங்களின் பரிமாற்ற சிக்கல்கள் போன்ற காரணத்தினால் கட்டுமானம் கால தாமதமாகியதால் நிதி ஏற்பாடு எஞ்சியது. வருங்காலத்தில் இவ்வாறான நிலைகளை குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் |

### 3.6 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் படி திணைக்களத்தினால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஒவ்வொரு ஆண்டிற்குமுரிய செயலாற்றல் அறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வருங்காலத்தில் குறித்த திகதிக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கிறேன். |

பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்படுததல் வேண்டும். எனினும் 2014, 2015 மற்றும் 2016 வருடங்களின் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு 2018 இல் முன்வைக்கப்பட்டது.

**3.7 பெறுகைகள்**

------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 வருடாந்த வரவுசெலவு மதிப்பீட்டின் படி திணைக்களகத்திற்கு மூலதன நிதி ஏற்பாடாக ரூபா 198.7 மில்லியன் ஒதுக்கப்பட்டு இருந்தாலும் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைகள் திட்டத்தின் படி மூலதன நிதி ஏற்பாடு தேவைப்பாடு ரூபா 217.7 ஆக காணப்பட்டது. அதன் படி வருடாந்த அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு பணத்தொகையை மீறி ரூபா 19 மில்லியன் பெறுகைகள் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருந்து. | வருடாந்த பெறுகைகள் நடவடிக்கைகள் சரியாக திட்டமிடப்படல் வேண்டும். | வருங்காலத்தில் பெறுகைகள் திட்டத்தினை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கிறேன். |
| (ஆ) மீளாய்வாண்டிற்குறிய பெறுகைகள் திட்டத்தின் முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | பெறுகை நடவடிக்கைகளின் முன்னேற்றம் அறிக்கையிடப்பட வேண்டும். | பெறுகை நடவடிக்கைகளின் முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. |
| (இ) 2006 அரச பெறுகைகள் வழிக்காட்டி கோவையின் 4.2.1 பந்தியின் பிரகாரம் திணைக்களத்தினால் குறைந்தப்பட்சமாக 03 வருடங்களுக்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்ட பிரதான பெறுகை திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். எனினும் அவ்வாறு தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | குறிக்கப்பட்ட வழிக்காட்டி கோவையை பின்பற்றுதல் வேண்டும் | பெறுகை திட்டங்கள் அதன் பிரகாரம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| (ஈ) பெறுகை திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 209 மில்லியன் ஆன 04 பெறுகைகள் காரணிகள் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கப்படவில்லை. | பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள குறிகோள்களை அடைய தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். | காணியின் உரிமை கிடைக்கப் பெறாததினால் பணிகளை நிறைவேற்ற தாமதமாகியது. |
| (உ) வருடாந்த வரவு செலவு மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப்பட்ட எனினும் பெறுகைகள் திட்டத்திற்கு உள்ளடக்கப்படாத 04 செலவு விடயங்களுக்காக திணைக்களத்தினால் ரூபா 10,049,985 செலவொன்று ஏற்கப்பட்டிருந்தது. | முறையாக பெறுகைகள் திட்டத்தினை தயாரித்தல் வேண்டும். | 2019 வருடத்தின் பெறுகைகள் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| (ஊ) அலுவலக மரவேளை உபகரணம் கொள்வனவு செய்யப்படும் போது, மர வகை, தரம் மற்றும் உத்தரவாத காலம் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளாப்படாமல் குறைவான விலையின் அடிப்படையில் தனியார் நிறுவனமொன்றிலிருந்து 2018 ஆம் ஆண்டில் ரூபா 4,801,900 ஆன கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் தேவைக்கேற்ப சரியான மற்றும் விபரமான விபரக்குறிப்பை தயாரித்தல் மற்றும் ஆய்வுகளை மேற்கொள்ளல் வேண்டும் | தேவைக்கேற்ப முடியுமான வரையில் சரியான மற்றும் விபரமான விபரக்குறிப்பை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

### 3.8 நட்டங்களும் சேதங்களும்

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டில் விபத்துக்குள்ளான 57-9387 இலக்கமுடைய வாகன பழுது பார்த்தல் அல்லது அகற்றல் நடவடிக்கை மேற்கொள்ளப்படாது 2019 ஜூன் மாதம் வரையில் வெவ்வேறு அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கப்பட்டு செத்சிரிபாய சுற்றாடலில் தரிக்கப்பட்டு காணப்பட்டது. | நட்டம் மற்றும் பாதிப்புக்களை குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் | 57-9387 இலக்கமுடைய வாகனத்தின் விபத்தை ஏற்படுத்தல் மற்றும் திருடல் தொடர்பாக அரச நிர்வாக அமைச்சினால் முதற் கட்ட விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றது. அவ் விசாரணைகள் முடிந்தவுடனே அகற்றலுக்கான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

## 3.9 முகாமைத்துவ பலவீனங்கள்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்குரிய 104 இலக்கமுடைய உத்தியோகபூர்வ இல்லம் 2017 மே மாதத்திலிருந்து பயன்படுத்தப்படாமையினால் இரு வருட காலம் திணைக்களத்திற்கு வேறு எந்த வருமானமும் பெறப்பட்டிருக்கலவில்லை. அத்துடன் இல்ல சுற்றுச் சூழல் அவதானங்களுக்கு முகங்கொடுத்து காணப்பட்டது. | திணைக்களத்திற்குரிய சொத்து கட்டுப்பாடு முறையாக காணப்படுதல் வேண்டும். | தற்போது அமைச்சின் மேலதிக செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) திணைக்களத்திற்குரிய 103 இலக்கமுடைய உத்தியோகபூர்வ இல்லம் திணைக்களத்தின் ஊழியரொருவர் தங்கி இருப்பதோடு 2017 ஜுலை 07 திகதியின் பின்னர் இல்லம் வழங்கப்படடதற்காக குறித்த ஊழியரோடு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முறையாக உடன்படிக்கைக்கு உடன்படல் வேண்டும் | முன்னர் உடன்படிக்கை இல்லாததனால் பின்னர் உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது. |
| (இ) 2017 இல் ஓட்டத்திலிருந்து அகற்றிய C-3455, GJ- 1531 மற்றும் KC- 3369 இலக்கமுடைய வாகனங்கள் 2018 திசெம்பர் 31 வரை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அவ் வாகனங்கள் காப்புறுதிக்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 50, 431 செலவிடப்பட்டிருந்தது. | திணைக்களத்திற்குரிய சொத்து முறையாக கட்டுப்படுத்தல் வேண்டும். | தற்போது அவ் வாகனங்கள் வட மத்திய மாகாண சபைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. |

## 4. மனித வள முகாமைகத்துவம்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 திகதிக்கு திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 367 ஆகும். எனினும் உண்மையான ஊழியர் எண்ணிக்கை 267 ஆகும். எனவே 100 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் 37 பதவி வெற்றிடங்கள் உயர் நிர்வாக மட்ட பதவி வெற்றிடங்கள் ஆகும். | மேலதிக பதவி நிலைகளாயின் அவற்றை அகற்றல் வேண்டும். | பதவி வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக முகாமைத்துவ சேவை திணைக்களம் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) திணைக்களத்தினால் அங்கு சேவை செய்த 29 வெளி ஊழியர்களுக்கு 2001 சனவரி 31 திகதிக்கு ரூபா 1,080,882 இழப்பீடு செலுத்தப்பட்டிருந்தது. மேலும் அரசியல் காரணங்களினால் வெவ்வேறு பிரச்சணைகளுக்கு முகம் கொடுத்தவர்களுக்கு ஆறுதல் அளித்தல் என்ற பெயரில் இன்னும் ரூபா 1,600,000 இழப்பீடு செலுத்தப்பட்டிருந்தது. பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவினூடாக குறிப்பிடப்பட்ட ஊழியர்களுக்கு எதிராக அரசியல் பழிவாங்கல் அவதானிக்கப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளபோதும் இரக்கம் கருதி இழப்பீட்டு பணத்தை பெற்றுக்கொடுக்க தீர்மாணிக்கப்பட்டிருந்தது. | மனித வள முகாமைகத்துவம் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும் | அரசியல் காரணங்களினால் வெவ்வேறு பிரச்சணைகளுக்கு முகம் கொடுத்தவர்களுக்காக விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவினால் பெற்றுக்கொடுக்கப்பட்ட பரிந்துரை அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்டதனால் அத் தீர்மானத்தின் படி தீர்ப்பணவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |